## 31. சோதனைகள் எனக்கு வந்தாலும்

### பல்லவி

சோதனைகள் எனக்கு வந்தாலும்
நெருக்கங்கள் என்னை வாட்டினாலும்
பாடுகள் என்னை சூழ்ந்தாலும்
பயமில்லையே.....

### அனுபல்லவி

இயேசப்பாவின் கரம் பிடிக்கும்
பிள்ளை நானே
என் கரத்தைப்பிடித்து நடத்தும்
நல்ல தகப்பன் நீரே

### சரணங்கள்

1. செங்கடல் முன்னே நின்றாலும்
பார்வோன் என்னை துரத்தினாலும்
அவன் சேனை முழுவதும் சூழ்ந்தாலும்
பயமில்லையே.....
- நான் இயேசப்பாவின்

2. யோர்தான் முன்னே நின்றாலும்
அதன் வெள்ளங்கள் என்னை சூழ்ந்தாலும்
எரிகோ என்னை மிரட்டினாலும்
பயமில்லையே.....
- நான் இயேசப்பாவின்

3. தண்ணீர் மேல் நடந்தாலும்
ஆறுகள் என்மேல் புரண்டாலும்
அக்கினி பற்றி எரிந்தாலும்
பயமில்லையே.....
- நான் இயேசப்பாவின்